வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 12 (2019) | அரசியல் விஞ்ஞானம் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ ***1 – 15* வரையான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் நான்கு சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

*01.* அரசியல் என்பது

A – அதிகார அரசியலின் நடைமுறைப் பகுதியாகும்.

B – ஒழுக்க மற்றும் விழுமியங்களை கடுமையாக கட்டுப்படுத்தப்படுகிறது.

C – அரசியல் கட்சிகளாலும், அரசியல் வாதிகளாலும் மேற்கொள்ளப்படும் ஒரு விளையாட்டாகும்.

D – மோதும் நலன்கள் அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள் என்பவற்றின் இறுதி பெறுபேறு ஆகும்.

E – அதிகாரத்தை கைப்பற்றுவதையும், தக்கவைப்பதனையும் பரவலாக்குவதனை நோக்கமாகக் கொண்டது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

agaram.lk

*02.* அரசியல் நடைமுறைகள் என்பது

A – சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள்

B – பெரும்பான்மையினரின் விருப்பம்

C – சமூகச்சூழல் முழுவதையும் பரிசீலிக்கின்றது

D – மக்கள் இறைமையை ஏற்றுக்கொள்ளுதல்.

E – சட்ட உருவாக்க செயன்முறை பாராளுமன்றத்தின் செயற்பாடுகளில் தீர்மானிக்கும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

*03.* அரசியல் பொருளியல் அணுகுமுறை என்பது

A – பொருண்மிய வளர்ச்சியில் கவனம் கொள்கின்றன

B – உற்பத்தி, வர்த்தகம் தேசிய வருமானம், ஆகிய பொருளாதார செயன்முறையோடு தொடர்புபடுகின்றன.

C – அரசியலானது பொருளாதார, சமூக வர்க்கங்கள் என்ற காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன.

D – அதிகாரம், ஆணையதிகாரம், வர்க்க வேறுபாடு, வர்க்க மோதல்கள், என்பவற்றுக்கு எதிராக துலங்களில் கவனம் எடுக்கின்றன.

E – அரசாங்க பொதுக்கொள்கை வெளியுறவுக் கொள்கைகளில் பொருளியல் தாக்கத்தில் கவனம் செய்கின்றன.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

04. நடத்தைவாத அணுகுமுறை என்பது

A – மனித நடத்தையை அடிப்படையாகக் கொண்டது.

B – அரசியல் ஆய்வின் மையப்பொருளாக அரசியல் மனிதனை கொண்டுள்ளது.

C – பெறுமதி சரா கற்கை முறையாக இருத்தல்.

D – புதிய நுட்பங்களைப் பயன்படுத்தல்

E – அரசியல் நிறுவனங்களின் கட்டமைப்பில் கூடிய கவனம் செலுத்துகின்றது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

05. தாராண்மை வாதம் என்பது

A – Liber என்ற இலத்தின் பதத்தில் இருந்து தோன்றியதாகும்

B – அரசு சமூகத்தின் பொது நலன் பேணும் தாபனமாகும்

C – அரசு சமூக உயர்குழாம் வகுப்பினரின் கருவியாகும்

D – அரசின் தான்தோன்றித்தமான ஆட்சிமுறைமைக்கு எதிரானது

E – தனியாள் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆட்சியாகும்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

06. தேசிய வாதம் என்பது

A – 19ம் மற்றும் 20ம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்த பிரதான அரசியல் கருத்தியல்

B – அரசியல் தேசியவாதம், கலாசார தேசியவாதம் என்ற இரு அம்சங்களை கொண்டுள்ளது

C – அரசியல் ஒழுங்கமைப்பின் மைய மூலக்கொள்கையை தேசமாகும் என்ற நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட அரசியல் கருத்தியல்

D – மாக்சிசத்திற்கும், பாசிசத்துக்கும், நாசிசத்துக்கும் எதிராகத் தோன்றிய ஓர் அரசியல் கருத்தியல்.

E – “இனம்” பற்றிய கருத்தாக காணப்படுகின்றது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

07. மதசார்பற்ற வாதம் என்பது

A – சமயத்தையும் அரசியலையும் கலக்காமலிருப்பது

B – சமய அடிப்படைவாதத்தை துணையாகக் கொண்டு மதம் சார் அரசுகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் அமைகிறது.

C – பன்மைக்கலாசாரவாதத்தினை மையப்படுத்தி சமய அடையாளங்களை உடைய சிறுபான்மை சமூகங்களின் உரிமையை பாதுகாத்தல்.

D – திருச்சபைக்கு இடையில் காணப்பட்ட “தூய்மையற்ற கூட்டிற்கு” எதிரான போராட்டத்தின் விளைவாக தோற்றம் பெற்றது.

E – 20ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற கருத்தியல்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

agaram.lk

08. சர்வதேச அரசியல் என்பது

A – நாடுகளுக்கிடையிலான அரசியல் செயன்முறையைக் குறித்து நிற்கின்றது

B – சர்வதேச நாடுகளின் ஆளும் கட்சிகளின் சித்தாந்த வலையமைப்புக்கள்

C – ஒரு அரசின் எல்லைக்கப்பால் நடைபெறும் அனைத்து விதமான அரச தொடர்புகளும்

D – அரசுகளுக்கிடையில் அதிகாரத்தினை பயன்படுத்தி நடாத்தப்படும் போராட்டம்

E – தேசங்கள், நாடுகள் என்பவற்றிக்கிடையேயான உறவுகள் முரண்பாடுகள்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

09. பொதுத்துறை நிர்வாகம் என்பது

A – பொதுக்கொள்கைகளை வகுத்தல் மற்றும் நடைமுறை படுத்தலோடு தொடர்புடையது

B – நிதிமுகாமைத்துவம் பற்றிய கற்றல்

C – நிர்வாகச் சட்டங்கள், ஒழுங்குகள் மீது பற்றுக்கொண்டுள்ளது.

D – வெளிநாட்டுத் தொடர்புகளோடு இணைந்துள்ள நிர்வாக கற்றல்

E – அரசியல் நிர்வாகத்தின் ஆட்சேர்பைக் கொண்டுள்ளது.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

10. சமஷ்டி அரசியலமைப்பு என்பது

A – மத்தியரசிற்கு யாப்பு மூலமாகவன்றி அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும்

B – மக்களின் ஒருங்கிணைந்த ஆதரவின் மூலம் சட்டப்படியான அரசியலமைப்பின் மூலம் இது உருவாகின்றது.

C – இறைமை அரசியலமைப்பு ரீதியாக பிரிக்கப்படுகின்றது

D – ஒரு மத்தியரசும் பலமான மாநில அரசும் காணப்படும்

E – ஒற்றுமையினதும் வேற்றுமையினதும் நன்மைகளை ஒன்றிணைப்பதாகும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

11. மந்திரி சபை அரசாங்கமுறை என்பது

A – நிறைவேற்று அதிகாரி பிரதமர்

B – கபினட் நம்பிக்கையில்லாத தீர்மான வெற்றியால் தன்னிலை இழக்கவல்லது.

C – அமைச்சரவை உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினரன்று

D – நாமமற்றும் உண்மை என்ற இரு நிறைவேற்றுப் பகுதிகளை கொண்டது

E – கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பட்ட பொறுப்பு என்ற இரு மூலக்கொள்கைகளின் அடிப்படையில் செயற்படும்.

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

agaram.lk

12. ஜனாதிபதி அரசாங்க முறை என்பது

A – மந்திரி சபை முறையைவிட அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை உத்தரவாதப்படுத்தும்

B – அரசியல் கட்சிகளின் செல்வாக்குச் செலுத்தலைக் குறிக்கும்

C – ஜனநாயக ஆட்சியை ஓரளவு பனவீனப்படுத்தும்

D – சமூகப் பலதன்மையுடைய நாடுகளுக்கு சாலவும் பொருந்தும்

E – வலுவேறாக்கத்தின் அடிப்படையில் செயற்படும்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

13. முரண்பாட்டின் சாதகமான செயற்பாடு என்பது

A – உலகளவில் பரவி வருகின்ற பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தங்கள்

B – சமூகம் வளர்ச்சியடையாமல் ஒரே இடத்தில் இருப்பதை தவிர்க்கிறது.

C – சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அவற்றைத் தீர்ப்பதற்கான தேவையை வலியுறுத்தல்

D – நபர்களும் சமூகமும் மாற்றமடைய பங்களித்தல்

E – சமூகக் குழுக்களின் ஒற்றுமைத்தன்மையினை வசப்படுத்துகிறது

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

14. முரண்பாட்டு தீர்வு ஊடகங்கள் என்பது

A – முரண்பாட்டு நிலை மாற்றம்

B – இணக்கப்படுதல்

C – மத்தியஸ்தம் செய்தல்

D – சமாதான உடன்படிக்கை

E – சமாதானத்தைக் கட்டியெழுப்பல்

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

15. முரண்பாடு தொடர்பில் செயற்படும் அணுகுமுறை என்பது

A – சமூக உறவுகள் அணுகுமுறை

B – கலாசார தொடர்பாடல் அணுகுமுறை

C – அடையாளத் தேவை அணுகுமுறை

D – மனித தேவைகள் அணுகுமுறை

E – பல்துறையிடை அணுகுமுறை

1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE

agaram.lk

❖ ***16 – 25 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றின் ஒன்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவு செய்க.***

16. அரசியல் கட்சிகளானவை
   1) நவீன ஜனநாயகத்தின் அதிசயமான கண்டுபிடிப்பாகும்.
   2) அரசியல் சமுதாயப்படுத்தலின் மிகமுக்கிய முகவர்களுள் ஒன்றாகும்.
   3) தேர்தல் வெற்றியின் மூலம் அரசியலதிகாரத்தை அமுலாக்குவதனை இலக்காக கொண்ட மக்கள் அமைப்புகளாகும்.
   4) தற்கால அரசியலில் மக்களை ஒழுங்குபடுத்தும் பிரதான ஊடகங்களாகும்.
   5) பொதுமக்களை அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுத்தல் மற்றும் தலைமைத்துவம் வழங்குதல்.

17. சிவில் சமூகமானவை
   1) தாராள ஜனநாயகத்தின் ஓர் அத்தியாவசியப் பண்பாகக் கருதப்படுகின்றது.
   2) சமூகத்தின் "சிறிய படையணிகளின் திரட்சி ஆகும்.
   3) ஆட்சி தொடர்பான காவல் நாயாக செயற்படுதல்.
   4) அரசாங்கம், குடும்பம், சந்தை என்பன ஆகும்.
   5) அரசின் ஆணையதிகாரத்திலிருந்து மக்களின் சிவில் அதிகாரத்தை வேறுபடுத்திக்காட்டப் பயன்படும் எண்ணக்கரு.

18. அமுக்ககுழுக்களானவை
   1) நல்லாட்சியினை கொண்டு நடத்துவதற்கு அத்தியாவசியமானது.
   2) தனிப்பட்ட நலன்களின் மேம்பாட்டுக்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மக்கள் சங்கங்களாகும்.
   3) தேசிய ரீதியானவையாகவும், சர்வதேச ரீதியானவையாகவும் காணப்படும்
   4) தமது நலன்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் அடைவதற்கும் பலவந்த வழிமுறைகளை பயன்படுத்தும்.
   5) அரசியல் கட்சிகளின் குறைநிரப்பியாக செயற்பட்டு பிரஜைகளின் அரசியல் பங்குபற்றல் வாய்ப்புக்களை விரிவுபடுத்தல்.

19. அரசு தொடர்பாக
   1) நீதியை நிலைநாட்டுதல், நீதிமன்ற நிருவாகம் மற்றும் தண்டனை வழங்கல்.
   2) பொருளாதார நிருவாகம் மற்றும் வழிநடத்தல்.
   3) சமூக நிருவாகம் வழிநடத்தல் மற்றும் சமூக கண்காணிப்பு.
   4) யுத்தப்பிரகடனம் மற்றும் யுத்தம் செய்தல்.
   5) அரசாங்கத்தின் அரசியல் கரமாகும்.

20. கிரேக்க நகர அரசு தொடர்பாக
   1) அரசியல் தொடர்பில் ஒழுங்கமைந்த முதலாவது அரச முறைமை.
   2) ஒழுங்கமைந்த மக்களுடன் கூடிய ஆட்சி முறை மற்றும் வாழ்க்கை முறையை கொண்டது.
   3) அரசு தொடர்பான மிக உயர்வான உணர்வு காணப்பட்டது.
   4) ஜனநாயகம் மற்றும் பிரஜைகளுக்கான அரசியல் செயற்பாடுகள் என்பனவற்றை மையப்படுத்தி தோற்றம் பெற்றது.
   5) பெண்கள், அடிமைகள் குடியேற்ற வாதிகளுக்கு பிரசார உரிமை கிடைத்தது.

agaram.lk

21. ஒற்றையாட்சி அரசியலமைப்பின் படி
    1) அதிகாரமற்ற ஒரு மத்திய அரசாங்கம் உருவாகுவதற்கு வழிசமைக்கின்றது.
    2) இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் மத்திய அரசாங்கத்தின் தனியுரிமை நிலவுதல்.
    3) ஒற்றைக் குடியுரிமையும் சட்டமுறையும் நீதித்துறையும் சிவில் சேவையும் நிலவுதல்.
    4) மத்திய அரசாங்கத்தினால் மட்டும் தேசத்தின் நலன்கள் முன்வைக்கப்படல்.
    5) சிறிய நிலப்பரப்பைக் கொண்ட அல்லது ஒருமைத்தன்மையான அரசுகளுக்கு பொருத்தும் என கருதப்படுகிறது.

22. அனைத்தாண்மை அரசாங்க முறையின்படி
    1) தனிநபர் கையில் அரச அதிகாரம் குவிந்திருப்பது.
    2) தடைசெய்யக்கூடிய அரசியலமைப்போ அல்லது வேறு ஏதேனும் சட்டமோ இவ்வாட்சி முறையில் காணப்படாது.
    3) தம்மைத் தாமே நியமித்துக் கொண்ட ஆட்சியாளரால் அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் ஓர் அரசாங்க முறையாகும்.
    4) ஆட்சி பற்றி விடயத்தில் மக்களின் குரலில்லாத ஓர் அரசாங்க முறையாகும்.
    5) அரச அதிகாரம் சில்லோராட்சி உயர் குழாமினரால் பிரயோகிக்கப்படும் ஓர் அரசாங்க முறைமையாகும்.

23. சமவுடைமை வாதம் தொடர்பாக
    1) 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய கருத்தியல்
    2) காள்ல்மாக்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் இருவரும் இணைந்து வெளியிட்ட சமவுடைமைவாதம் மாக்சிய கோட்பாடு ஆகும்.
    3) பொருளாதார பரிமாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் சமூகப்புரட்சியை தடைசெய்கிறது.
    4) உழைப்பு, சுரண்டல், வறுமை, சமூக சமத்துவமின்மை என்பவற்றை இல்லாது செய்ய வேண்டும்.
    5) 20ம் நூற்றாண்டில் “உலக சமவுடைமை இயக்கம்” என்ற அரசியல் செயற்பாட்டிற்கு வழிசமைத்தது.

agaram.lk

24. குடியரசுவாதம் தொடர்பாக
    1) குடியரசுவாதம் அரசாட்சி முறைமைக்கு நேர்த்தியானது அன்று
    2) குடியரசுவாதத்தின்படி இறைமையின் உரிமையாளன் பொதுமக்கள்
    3) அரச தலைவர் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறது.
    4) அனைத்து பிரஜைகளினதும் பொது நலனுக்காகவே பிரசைகள் அரசியல் சமூகமாக ஒழுங்கமைத்திருப்பது நோக்கமாகும்.
    5) பிரஜைகள் அரசியலில் பங்குபற்றல் என்பதில் குறிக்கோள் கொண்டுள்ளது.

25. சமூ ஜனநாயகம் தொடர்பாக
    1) ஜேர்மனியில் தொழிலாளர் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற கருத்தியல்.
    2) பொருளாதாரத்துறையில் அரசு, தலையிடுவது இல்லை.
    3) செல்வம் மற்றும் வருமானங்களை சமூகத்திற்கு மீள பகிர்ந்தளித்தல்.
    4) கூட்டுப்பேரம் பேசுதல் ஒப்பந்தம் காணப்படும்.
    5) சமூக ஜனநாயகத்தின் முன்னோடி எட்வர்ட் பேன்ஸ்டைன் ஆவார்.

(25X1=25புள்ளிகள்)

## பகுதி II

## பகுதி A

❖ **இப்பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01) அரசியலை கல்வியாகக் கற்றல் என்பது இரு பொருள்களைக் கொண்டவை. அவற்றை குறிப்பிடுக.

அ) ..............................................................................................

ஆ) ..............................................................................................

02) அரசியல் கற்கைக்குட்படும் பிரதானமான நிறுவனங்கள் இரண்டினை குறிப்பிடுக.

அ) ..............................................................................................

ஆ) ..............................................................................................

03) பின்வரும் நூல்களின் நூலாசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

அ) முரண்பாட்டின் சமூகவியல் :- ..............................................................

ஆ) அரசியல் :- ..............................................................

04) பின்வரும் நூலாசிரியர்களின் நூல்களை குறிப்பிடுக.

அ) மொண்டஸ்கியூ :- ..............................................................

ஆ) தோமஸ்ஹொப்ஸ் :- ..............................................................

agaram.lk

05) அமுக்கக்குழுக்களின்பண்புகள் இரண்டினை குறிப்பிடுக.

அ) ..............................................................................................

ஆ) ..............................................................................................

06) சர்வதேச அரசியலில் இடம்பெறும் செயற்பாடுகள் இரண்டு வகைப்படும் அவற்றினை குறிப்பிடுக.

அ) ..............................................................................................

ஆ) ..............................................................................................

07) ஒற்றையாட்சி நாடுகளில் மத்தியில் இருந்து கீழ் மட்டத்திற்கு அதிகாரத்தை பரவலாக்கல் முறைகளில் இரண்டை குறிப்பிடுக.

அ) ..............................................................................................

ஆ) ..............................................................................................

08) இந்திய அரசியலமைப்பு அவசரகால நிலையில் மூன்று வகைப்படும். அவற்றில் இரண்டினை குறிப்பிடுக.

அ) ..............................................................................................

ஆ) ..............................................................................................

09) “வம்புடைய அரசாங்கம்” “கொடுங்கோல் ஆட்சி” என கூறிய சிந்தனையாளர்களின் பெயர்களை முறையே எழுதுக.

அ) ......................................................................................................................

ஆ) ......................................................................................................................

10) பேராசிரியர் ஜோகான் கல்டுங் சமாதானம் என்பதற்கு இரு வகையான அர்த்தத்தை வழங்கியுள்ளார். அவற்றை குறிப்பிடுக.

அ) ......................................................................................................................

ஆ) ......................................................................................................................

(10X1=10 புள்ளிகள்)

## பகுதி II

## பகுதி B

❖ **பின்வரும் வினாக்களில் இருந்து இரண்டு வினாக்களை மாத்திரம் தெரிவு செய்து எழுதுக.**

01) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் வகிபாகத்தை பரிசீலிக்குக.

1) அரசியல் கோட்பாடுகள்
2) அரசியல் கட்சிகள்
3) சிவில் சமூகம்

(2X10=20 புள்ளிகள்)

02) பின்வரும் அரசியல் மாதிரிகளில் இரண்டினைப்பற்றி விளக்குக.

1) சமஷ்ஷ அரசியலமைப்பின் பண்புகள்
2) பாராளுமன்ற அரசியலமைப்பின் பண்புகள்
3) ஜனாதிபதி அரசியலமைப்பு பண்புகள்

(2X10=20 புள்ளிகள்)

agaram.lk

03) பின்வருவனவற்றை விளக்குக.

1) தாராண்மைவாத சிந்தனையாளரின் அரசியல் கருத்தியல்கள்
2) பாசிசவாத சிந்தனையாளரின் அரசியல் கருத்தியங்கள்

(2X10=20 புள்ளிகள்)

04) பின்வருவனவற்றை விளக்குக.

1) முரண்பாட்டின வகைப்படுத்தல்
2) முரண்பாட்டு தீர்வு செயன்முறை

(2X10=20 புள்ளிகள்)